# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1175/13 - 2001 මාර්තු 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2001.03.15

1175/13 ஆம் இலக்கம் - 2001 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைச் சபையுடன் கலந்தாலோசனை செய்து சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யு. டீ. ஜே. செனவிரத்ன,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2001, பெப்புருவரி 27

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2000 ஆம் ஆண்டின் உணவு (கோதுமை மாவில் பொட்டாசியம் புறோமேற்றைத் தடை செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்;

2. ஆளெவரும் கோதுமை மாத் தயாரிப்பில் பாவிப்பதற்காக பொட்டாசியம் புறோமேற்றை இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ, களஞ்சியப்படுத்தலோ ஆகாது;

3. ஆளெவரும் பொட்டாசியம் புறோமேற் சேர்க்கப்பட்ட கோதுமை மாவை இறக்குமதி செய்தலோ, கொண்டு செல்லுதலோ, களஞ்சியப்படுத்தலோ விற்பனை செய்தலோ விற்பனைக்காகக் காட்டி வைத்தலோ ஆகாது;

4. ஆளெவரும் பொட்டாசியம் புறோமேற் சேர்க்கப்பட்ட கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்தலோ, கொண்டு செல்லுதலோ, களஞ்சியப்படுத்தலோ, தயாரித்தலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

3-846